மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் தற்காலிக பணியாளர்களாக இருப்பவர்களுக்கு உடனடியாக நேரிடையாக சூப்பர்வைசர்களாக புரோமோஷன் கொடுப்பது என்பது நடக்க முடியாத காரியம். ஏனென்னில் முதலில் தற்காலிக பணியில் இருப்பவர்களுக்கு நிரந்தரமான பணிகள் கொடுத்தாக வேண்டும். பிறகுதான் அக்கார்டிங் டு தேர் சீனியாரிட்டி, புரமோஷன் கொடுக்க பரிசீலிக்க முடியும் அதுதான் இருக்கிற முறை.

தேயிலை மீதான விற்பனை வரி

*வினா எண் 63—திரு. கு. ரமணி மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தேயிலைத் தோட்ட முதலாளிகள் கேட்டதற்கிணங்க தேயிலை மீது விற்பனை வரி குறைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில் அது பற்றிய விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம். (அ) ஆம்.

(ஆ) கோவை மற்றும் கூனூரில் உள்ள தேயிலை ஏல விற்பனை மையங்களில் விற்கப்படும் தேயிலைக்கு 5 சதவீதமாக இருந்த வரியினை 2 1/2 சதவீதமாக 9-11-81 முதல் ஒரு ஆண்டுக்கு குறைக்கப்பட்டது. பிறகும் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இந்த குறைக்கப்பட்ட வரி விதிப்பை 9-11-82 முதல், 8-11-1983 முடிய நீடித்துள்ளது.

திரு. கு. ரமணி: மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்ட முதலாளிகள் நிறைய இலாபம் சம்பாதிக்கக் கூடிய தொழிலை நடத்தும் பணக்காரர்கள். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அவர்களுடைய தொழிலில் சிறிது சங்கடங்கள் ஏற்பட்டாலும் தொடர்ந்து இலாபம் அடையக்கூடிய சூழ்நிலை அந்தத் தொழிலில் உண்டு. அவர்களுக்கு ஏன் அரசாங்கம் பரிந்துப் போய் இந்த வரியைக் குறைக்க வேண்டும்? இதற்கு என்ன காரணம் என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தேயிலையை ஏலம் போடுகிற முறை இருக்கிறது. அதை கேரளாவிலே போடுகிறார்கள். கேரளாவிலே ஏலம் போடுவதால் இங்கேயுள்ளவர்கள் அங்கே போய் ஏலம் எடுக்கிறார்கள். இதனால் நம்முடைய வருமானம் குறைத்துவிடுகிறது என்கிற காரணத்தால் கோவையிலே புதியதாக ஏலம் போடுகிற முறையை ஏற்படுத்தியிருக்கிறோம்.

இதனால் இங்கேயுள்ள வியாபாரிகள் அங்கே போகாமல் இங்கேயே வாங்குகிறார்கள். அரசுக்கு அதிக இலாபம் வருகிறது.

திரு கு. ரமணி: தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியே வேறு. நான் கேட்டிருப்பது தேயிலை மீது விற்பனை வரி குறைக்கப்பட்டுள்ளதா என்பது? அப்படி குறைக்கப் பட்டிருந்தால் அது எந்தவிதத்திலே நியாயம்? ஏலம் போடும் முறையை கோவையிலே ஏற்படுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதில் அரசாங்கத்திற்கு இலாபம் வருகிறது—வரட்டும். அதைப்பற்றிய பிரச்னை அல்ல நான் கேட்டது. சாதாரணமான மக்களுக்கு பல் பொடியிலிருந்து எல்லாப் பொருள்களுக்கும் விற்பனை வரியை போட்டிருக்கிற அரசு கொள்ளை இலாபம் சம்பாதிக்கக்கூடிய தேயிலைத் தோட்ட முதலாளிகளுக்கு ஏன் விற்பனை வரியைக் குறைக்க வேண்டும்—ஏன் அவர்களுக்கு அந்தச் சலுகை அளிக்க வேண்டும்? ஏன் வரியை அதிகமாக்கி வசூலிக்க நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றுதான் கேட்கவிரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இதுபற்றி ஆராய்ந்து இவ்வாறு குறைக்கலாம் என்று சொன்னதற்குப் பிறகுதான் குறைக்கப்பட்டிருக்கின்றது. இங்கே மட்டுமல்ல, கேளராவில் கூட வரி குறைவாக இருக்கின்றது. எனவே இங்கே குறைக்காவிட்டால் அங்கே போய்விடுமோ என்று எண்ணி அதைத் தடுப்பதற்காகத்தான் இவ்வாறு குறைக்கப் பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் கேரளாவிலே 5 சதவீதத்திலிருந்து 2 சதவீதத்திற்குக் குறைத்து விட்டார்கள். எனவே அங்கே போய்விடக் கூடாது என்பதற்காகவும் மேலும் மத்திய அரசு கூட்டம் போட்டு நீங்களும் மற்ற மாநிலங்களைப் போல் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் காரணத்தால் தான் குறைக்கப் பட்டது. கோயம்புத்தூருக்கு அருகிலே கொச்சி இருக்கின்றது. நாம் குறைக்காவிட்டால் அங்கே போய்விடும். ஆனால் அந்த வரியினை ஏற்றினால் அதன் பிறகு நம்முடைய தேயிலை அங்கே போனால் பரவாயில்லை அதை ஏற்றிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் அதை ஏற்றத்தயார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு கே. உச்சி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனை வரியினை 6 சதவீதத்திலிருந்து 2 சதவீதத்திற்கு குறைத்த பிறகும் கூட சில தனியார்கள் விற்பனை வரியினை ஏமாற்றுவதற்காக வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார் கள், எனவே அதைத் தடுகின்ற வகையிலே எல்லாத் தேயிலை யையும் இந்த மாநிந்திலேயே விற்கவேண்டும் என்ற வகையிலே ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா?

[1983 ஜனவரி 31

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தேயிலையை ஏற்றுமதி செய்வது என்பது மத்திய அரசின் பொறுப்பிலே இருக்கின்றது. வரியினை மட்டும்தான் நாம் போடுகிறோம். ஆனால் வரி ஏய்ப்பினைக் கண்டுபிடிப்பதற்காக அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது. ஏனவே குறிப்பாக எங்கேவது ஏமாற்றப்படுகின்றது என்று தெரிவித்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்ளே, இதுபற்றிய ஒரு கூட்டம் டெல்லியிலே நடந்ததாகச் சொல்லப்படுகின்றதே, அந்தக் கூட்டத்தைக் கூட்டியது யார்? அந்தக் கூட்டம் எப்போது நடந்தது? தேயிலையின் மீது இவ்வாறு வரி குறைப்பு செய்தால அதனால் ஆண்டு வாரியாக எவ்வளவு வருவாய் வருகின்றது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தேயிலையின் மூலமாக நமக்கு எவ்வளவு வருவாய் வருகின்றது என்றால் மொத்தமாக 1978-79-ல் 315 இலட்சம் ரூபாய். 1979—80-ல்278 இலட்ச ரூபாய் 19 0-81-ல் 305 இலட்சம் ரூபாய். வரியினைக் குறைத்ததற்குப் பிறகு இவ்வாண்டு வருமானம் 439 இலட்சம் ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சைதாப்பேட்டைத் தொகுதியில் வெள்ளத்தினால் ஏற்படும் சேதங்களைத் தடுக்கும் திட்டம்

வினா எண். 64 திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டுதோறும் பொதுவாக வெள்ளத்தால் சைதாப்பேட்டை தொகுதி பெருவாரியாக பாதிக்கப்படுகின்றதே அதற்காக அரசிடம் நிரந்தர நடவடிக்கை எடுக்க ஏதேனும் செயற் குறிப்புள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, சைதாப்பேட்டைத் தொகுதியில் உள்ள அடையாறு ஆற்றின் கரைப் பகுதிகளில் வசிக்கும் மக்களை ஆற்று வெள்ளத்திலிருந்து பாதுகாக்க நீண்ட கற்சுவர் ஆற்றின் கரையோரத்தில் கட்டப்பட்டது. மேலும் தற்போது உலக வங்கித் திட்டத்தின் கீழ்த் மாம்பலம், நந்தனம் திறந்த கழிவுநீர்க் கால்வாய்த் திட்டம்